DEPOSITION OF WITNESS
(Chapter XXV of BNSS)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

Case No CC.No. 211/2025 LW– 9 PW– 5

| | |
|---|---|
| Name | : கிருஷ்ணகுமார் (புலன் விசாரணை அதிகாரி) |
| Father's/Husband's Name | : முருகேசன் |
| Village | : திண்டுக்கல் தாலுகா காவல் நிலையம் |
| Taluk | : திண்டுக்கல் |
| District | : திண்டுக்கல் மாவட்டம் |
| Age | : 34 /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18th day of April 2026

சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் பகல் 4:00 P.M. – 4:20 P.M.

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். )

**(சாட்சிக்கு காணொளி காட்சி வாயிலாக சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் தற்போது திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் தாலுகா காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.11.2024ம் தேதி நத்தம் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் இருந்து வந்த தகவலைப் பெற்று மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த நத்தம், உலுப்பகுடி, கே.கே.நகரைச் சேர்ந்த பழனிச்சாமி மகன் செந்தில் என்பவரிடம் விசாரித்து அவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தைப் பெற்று 12.00 மணிக்கு நிலையம் வந்து நிலையக் குற்ற எண்.624/2024 பிரிவுகள் 281, 125(a) BNSஆக வழக்கு பதிவு செய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.3ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** முதல் தகவல் அறிக்கையின் அசலை நத்தம்

நீதிமன்றத்திற்கு அனுப்பியும், மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், எனது புலன் விசாரணைக்கு ஒரு நகலை எடுத்துக் கொண்டு 12.11.2024ம் தேதி 13.00 மணிக்கு சம்பவ இடமான உலுப்பகுடி, அய்யங்கார் பேக்கரி அருகே சென்று சாட்சிகள் சுரேஷ், நடராஜன் ஆகியோர் முன்னிலையில் வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்தேன். **(மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.4ஆகவும், பார்வை மகஜர் அ.த.சா.ஆ.5ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)**

2. பின்னர் சாட்சிகளான செந்தில், ரமேஷ், செல்லமணி, வனிதா, சுரேஷ், நடராஜன் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கில் சம்பந்தப்பட்ட TN 63 BS 7690 என்ற பதிவு எண் கொண்ட எதிரி ஓட்டி வந்த டாடா ஏஸ் வாகனத்தை 14.11.2024ம் தேதி நத்தம் வட்டார போக்குவரத்து அலுவலருக்கு வாகன தணிக்கை செய்ய வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பி வைத்தேன். **(வேண்டுகோள் கடிதம் அ.த.சா.ஆ.6ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** அன்றைய தினமே 11.00 மணிக்கு வழக்கின் எதிரி இளையராஜா என்பவரை நத்தம் காவல் நிலையத்தில் ஆஜரானவரை கைது செய்து தக்க பிணையில் விடுவித்தேன். பின்னர் 26.11.2024ம் தேதி காயம்பட்ட நபர் ஓட்டி சென்ற இருசக்கர வாகனமான TN 57 CW 6988 என்ற பதிவு எண் கொண்ட ே ஹாண்டா ஷைன் இருசக்கர வாகனத்தை நத்தம் வட்டார போக்குவரத்து அலுவலருக்கு வாகன தணிக்கை செய்ய வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பி வைத்தேன். **(வேண்டுகோள் கடிதம் அ.த.சா.ஆ.7ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

3. மேற்படி இரண்டு வாகனங்களுக்கும் வாகன சான்று பெற்று மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.கருப்பசாமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **(TN 63 BS 7690 என்ற பதிவு எண் கொண்ட எதிரி ஓட்டி வந்த டாடா ஏஸ் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.த.சா.ஆ.8 ஆகவும், காயம்பட்ட நபர் ஓட்டி சென்ற இருசக்கர வாகனமான TN 57 CW 6988 என்ற**

**பதிவு எண் கொண்ட ஹோண்டா ஷைன் இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.த.சா.ஆ.9 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் 30.09.2025ம் தேதி காயம்பட்ட ரமேஷ் மற்றும் செந்தில் ஆகியோர்களுக்கு சிகிச்சை அளித்த நத்தம் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.திலீப் ராஜேஷ்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **(செந்தில் மற்றும் ரமேஷ் ஆகியோரின் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ்கள் முறையே அ.த.சா.ஆ.10 மற்றும் 11ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

4) மேற்படி காயம்பட்ட நபர்கள் இருவருக்கும் ஏற்பட்ட காயமானது கொடுங்காயம் என தெரிய வந்ததால் இவ்வழக்கின் சட்டப் பிரிவை 125(a) BNS என்பதிலிருந்து 125(b) (2 Counts) BNSஆக சட்டப் பிரிவை மாற்றம் செய்து சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். **(சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை அ.த.சா.ஆ.12ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** இத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து 30.09.2025ம் தேதி எதிரி மீது பிரிவு 281, 125(b) BNSன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

5) ஐயங்கார் பேக்கரியில் வேலை செய்யும் நபர்களை சம்பவ சாட்சியாகவோ மகசர் சாட்சியாகவோ விசாரிக்கவில்லை என்றால் சரிதான். புகார் மனுவிலும் எனது விசாரணையிலும் சாட்சிகள் ரோட்டை கடக்க முற்பட்ட போது விபத்து நேர்ந்ததாக தெரிவித்துள்ள நிலையில் ரோட்டை கடக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்தார்களா என்று விசாரித்தேனா என்றால் இல்லை. காயம் பட்ட இரு நபர்களின் காய சான்றிதழிலும் மேற்படி இருவரும் மது அருந்தி இருந்ததாக மருத்துவர் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். காயம்பட்ட நபர்களுக்கு சிகிச்சை அளித்த மதுரை அரசு மருத்துவமனை மருத்துவரையோ அல்லது திண்டுக்கல் அரசு மருத்துவமனை மருத்துவரையோ சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். பார்வை

மகஜர் இரவில் தயார் செய்யப்படவில்லை என்றால் சரிதான். பார்வை மகஜர் சாட்சியாக பெண் பாலர் யாரையும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

6) நான் சொன்னது போல் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் இரு சக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபர் மது போதையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எதுவும் இல்லாமல் ரோட்டை கடக்க முற்பட்டதில் அவராகவே விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்றால் சரியல்ல. பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் சம்பவ இடத்தில் தயார் செய்யப்படவில்லை என்றாலும், காவல் நிலையத்தில் வைத்து தான் தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. இருசக்கர வாகனம் ஆனது 15 நாட்கள் கழித்து தான் வாகன தணிக்கைக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். இடைப்பட்ட காலகட்டத்தில் வாகனத்தில் பழுதுகள் சரி செய்ய வாய்ப்புகள் உள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :** இல்லை

Co-Ordinater @ Court Point
(Sathishmani, Junior Assistant)

Co-Ordinater @ Remote Point Witness

மேற்படி சாட்சியத்தை, காணொளி காட்சி வாயிலாக சாட்சி சொல்ல– சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சாட்சி மற்றும் இரு தரப்பு வழக்கறிஞர்கள் ஆகியோருக்கு நேரடியாக Share Option மூலமாக சரிபார்க்க பதிவு செய்யப்பட்டது. அதனை சாட்சிக்கு ஈ–மெயில் மூலமாக படித்துப்பார்க்க அனுப்பப்பட்டு, அவர் சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்து நீதிமன்றத்திற்கு மீண்டும் தபால் மூலமாக அனுப்பி வைத்தார்.

J Aafreen Begum M.com., L.LM.,
Digitally signed by J Aafreen Begum M.com., L.LM.,
Date: 2026.04.18 17:52:09 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்